

புதுக்கோட்டை மாவட்டம் வன்னியன் விடுதியில் நடந்த ஜல்லிக்கட்டு போட்டியில் 25 காளைகளை தழுவி முதலிடம் பிடித்த சிவாவிற்க்கு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் இரு சக்கர வாகனத்தை பரிசாக வழங்கினார்



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் ஈச்சம்பட்டி ஊராட்சியில் தை திருநாளை முன்னிட்டு புதியதாக அமைக்கப்பட்ட கொடிக்கம்பத்தில் கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்புகளை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ் .ஆர். சிவலிங்கம் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் ஆர். வி.ஶ்ரீராம், ஆத்தூர் ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன் ,ஒன்றிய பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, பூக்கடை ராஜா, ராஜேந்திரன், ஒன்றிய துணை செயலாளர் சசிகுமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிவராமன்,அரியமுத்து, ராஜவேல், வரதராஜன், ரங்கசாமி, முத்துசாமி,சென்ன கிருஷ்ணன், ராஜா, அருள் மணி, அண்ணா துரை, ,செல்வி , பார்வதி, நாகேந்திரன், சக்திவேல், சண்முகம், சிலம்பரசன், மனோகரன், முருகன் ,அரசு, செல்வராஜ் , அய்யாகண்ணு ,கருணாநிதி, சேட்டு ,சிவாஜி ,நடராஜ், ரஜினி ,லியோ, அன்பழகன், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தொகுதிப் பங்கீடு:

# தி.மு.க.வுடன் பேச்சு நடத்த ம.தி.மு.க. 4 பேர் குழு!

## வைகோ அறிவிப்பு!

சென்னை, ஜன.21

தொகுதிப்பங்கீடு பற்றி தி.மு.க.வுடன் பேச்சு நடத்த ம.தி.மு.க. சார்பில் 4 பேர் குழுவை வைகோ அமைத்துள்ளார்.

ம.தி.மு.க.வும் இடம் பெற்றுள்ளது. அந்தக் கட்சி சார்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 4 பேர் குழுவை பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

அதன்படி இக்குழுவில் அவைத்தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ், பொருளாளர் மு.செந்திலதிபன், அரசியல் ஆய்வு மையச்



செயலாளர் ஆவடி இரா. அந்திரிதாஸ், தேர்தல் பணிச்செயலாளர் வி. சேஷன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

மேலும் துணைப் பொதுச் செயலாளர் ராசேந்திரன், கொள்கை விளக்க அணிச் செயலாளர் ஆ.வந்தியத்தேவன், தணிக்கைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.செந்தில் செல்வன், இளைஞரணிச் செயலாளர் ப.த.ஆசைத்தம்பி ஆகியோர் அடங்கிய தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

### சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணித் தலைவர் ஆர்.மாரி–

# துறைமுகம் மேற்கு பகுதிப் பிரதிநிதி எம்.சரவணன் இல்லத் திருமண வரவேற்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை! தயாநிதி மாறன் எம்.பி. - மேயர் பிரியா ராஜன் வாழ்த்துரை!

சென்னை, ஜன. 21-

சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணித் தலைவர் ஆர்.மாரியின் மகள் வழிப்பேத்தி-துறைமுகம் மேற்கு - 57 வது வட்ட பகுதிப் பிரதிநிதி எம்.சரவணன் - திருமதி.எஸ்.தேன்மொழி ஆகியோரின் புதல்வி எஸ்.சந்தியா - கே.பி.பார்க் - டிமலஸ் சாலை - பி.ரவி - திருமதி. ஆர்.கௌரி ஆகியோரின் புதல்வர் ஆர்.பார்த்திபன் ஆகியோரின் திருமணம் நாளை (22.1.2024 - திங்கள் கிழமை) காலை 6 மணியளவில் பட்டாளம் - ஆஞ்சநேயர் கோவில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பு அன்று மாலை 6 மணி அளவில் கொடுங்கையூர் வியாசர்பாடி - எம்.கே.பி.நகர் சென்னை - பாலம் அருகில் அமைந்துள்ள ஜெ.ஆர்.கே. மஹாலில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை வகிக்கிறார்.

எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர் எம்.விஜயகுமார் ஜி.எம். தேவன், இசட்.ஆசாத், பி.ஶ்ரீராமுலு, லயன் பி.உதய சங்கர், கே.சரஸ்வதி, ஆர். ராஜேஷ்ஜெயின், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துகுமார், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, பா.ஜெகதீஷ், ஏ.பி. எஸ்.செந்தில் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.ஆர்.மதன், கே.ஆர். மதன், எம்.இருதயராஜ், என். கோபிகிருஷ்ணன், டி.வினோத்கோத்தாரி, எஸ். வடிவேல், ஆர்.ராம்பிரசாத், இரா.வேணுகோபால், டி. கே.கலைவாணன், எம். ராணி, எம்.செல்வி, எம்.முத்தமிழ்ச்செல்வி, கே.பத்மா, ஜி. .நேரு, எம்.முத்து, கே.கஸ்தூரி, ஜே.டி.எம்.ஹரிஷ்குமார், இ.மாயா, டி.கே.சங்கர், எஸ்.பச்சைமுத்து, வி. ஸ்டாலின், டி.அலெக்ஸ் பாண்டியன், இ.சுரேஷ், எஸ். முகேஷ், கே.ஆர்.மணிரத்னம், ஆர்.கே.பாலாஜி, ஆர். ராம், எஸ்.விஜயசேகர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

தயாநிதிமாறன் எம்.பி., மேயர், பிரியாராஜன், மற்றும் என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, எம்.இ.கனி, ஆர். கலைச்செல்வி, வெ.பரிமளம், எல்.நவின்., மே. ஜனார்த்தனன், ஆர்.சுந்தரம், எஸ்.சந்தியாகு, பா.முத்துகுமார், செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப. ஜெயராமன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், எல்.சம்பத்குமார், எல்.சாந்திலால், வி.எம். முருகவேல், எம்.ஜெயசங்கர், பா. கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், டி.சதிஷ்குமார், வே. பா.பிரபாகரன், எல்.சத்திய நாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன் உட்பட பலர் வாழ்த்துகின்றனர்.

# சேலம் இளைஞரணி மாநாட்டிற்கு சோழிங்கநல்லூரிருந்து சைக்கிள் பேரணி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வரவேற்றார்!

சென்னை, ஜன. 21-

கழக இளைஞரணி 2வது மாநாடு நடைபெறும் சேலத்திற்கு சோழிங்கநல்லூரிலிருந்து தொடர் சைக்கிள் பயணமாக (311 கி.மீ) வந்தடைந்தவர்களை மாநாட்டு பந்தலில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பயனாடை அணிவித்து வரவேற்றார். சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கு, மத்திய பகுதி கழகத்தின் ஏற்பாட்டில் சேலத்தை நோக்கி தொடர் சைக்கிள் பயணத்தை தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. எஸ். அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் 19- 01. 2024 அன்று பகல் 1.30 மணியளவில் சோழிங்கநல்லூர் கலைஞர் கருணாநிதி சாலை சுங்கசாவடியில் துவக்கி வைத்தனர். இந்த தொடர் சைக்கிள் பயணம் நேற்று 20-01-2023 சேலம் மாநாட்டு பந்தலை சுமார் 311 கிலோ மீட்டார் தூரம் 198வது வட்ட செயலாளர் பா.தேவகுமார் தலைமையில் வந்தடைந்தது. இந்தத் தொடர் சைக்கிள் பயணத்தில் ஈடுபட்ட பி.ராஜேஷ்குமார், கே.பிரசாந்த், ஏ. வேலு, டி.வேலு, கே.ராகவன், ஜெ.யோகேஷ்வரன், விஸ்வநாதன், பச்சையப்பான், ஆகியோரை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பொன்னாடை அணிவித்து வரவேற்றார். அதுபோது சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், ஏ. எம்.வி. பிரபாகர்ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.



மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை காரம்பாக்கம் கணபதி எம். எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன், மண்டலக்குழு தலைவர் பி.கே.மூர்த்தி , வட்டச் செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம், கே.குமரேசன், எம்.ஏ.செந்தில், சுரேஷ், எம் .சி.எழிலரசு, ஏ.ஜி.வேலன், டாக்டர் எம் .சி.அழகிரி, ஏ. சுந்தரி, எம்.எஸ்.பிரபா, டி.கலைநேசன், எம்.பி. நவராஜ், எம்.என்.ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம்.பி.நவக்குமார், எம்.எஸ்.தமிழ்அழகன், எம்.பி. சீனிவாசன், எஸ்.ஜமுனா, எஸ்.ராகுல், டி.ஜெயச்சந்திரன், எம்.ஜி.சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி சிவகங்கை மாவட்டம்

# கண்டுபட்டி கிராமத்தில் மஞ்சு விரட்டு - சமத்துவப் பொங்கல்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை. ஜனவரி 21.

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தாலுகா கண்டுபட்டியில் தை மாதம் 5ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் மஞ்சுவிரட்டு நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு நேற்று முன்தினம் 19ம் தேதி வெள்ளிக்கிழமை மஞ்சுவிரட்டு நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் கொடி அசைத்து மஞ்சு விரட்டு துவக்கி வைத்தார்.

130க்கும் மேற்பட்ட காளைகளும் 49 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றார்கள். முன்னதாக மாடுபிடி வீர்கள் மாட்டின் உரிமையாளர்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.சிறப்பாக காளை மாட்டினை பிடித்த மாடுபிடி வீரர்களுக்கும், மாட்டு உரிமையாளர்களுக்கும் பரிசுகளை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கிபாராட்டினார். ]

இந்த மஞ்சுவிரட்டில் தென்மாவட்டங்களிலிருந்து ஏராளமான மாடுகள் பங்கேற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் மோகன சந்திரன், திருப்புவனம் பேரூராட்சிமன்ற தலைவர் த. சேங்கை மாறன், காளையார் கோவில் வட்டாட்சியர் ராஜரத்தினம், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம். கென்னடி,யோக.கிருஷ்ணகுமார், வே.ஆரோக்கிய சாமி, ஒன்றியதுணை செயலாளர் முத்துக்குமார், கண்டுபட்டி மஞ்சுவிரட்டு ஒருங்கிணைப்பாளர் பில்லப்பன், மற்றும் சுற்று வட்டார கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட காவல் கண்காணிப் பாளர்பி.கே. அரவிந்த் உத்தரவின் பேரில் சிவகங்கை டி.எஸ்.பி. சிபிசக்கரவர்த்தி தலைமையில் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார் கள்.முன்னதாக தேவாலயத்தில் சிறப்பு பிரார்த்தனை வழிபாடுகள் பொங்கல். வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. 500க்கும் மேற்பட்டவர்கள் பொங்கல் வைத்து வழிபட்டனர். இந்துக்கள் கிறிஸ்துவர்கள் முஸ்லிம்கள் என்று அனைத்து சமூகத்தினர் ஒன்றாக பொங்கல் விழாவில் கலந்து கொண்டார்கள்.

### சேலம் இளைஞர் அணி 2வது மாநில மாநாடு

# திருவாரூர் மாவட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் புறப்பட்டனர்!

## பூண்டி கலைவாணன் தலைமையில்

திருவாரூர், ஜன21

திராவிட முன்னேற்ற கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் பங்கேற்க திருவாரூர் மாவட்டத்திலிருந்து மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ அவர்களின் தலைமையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சேலம் நோக்கி வாகனங்களில் புறப்பட்டனர்.

உலக அளவில் ஜனநாயக முறைப்படி மக்களின் மனம் கவர்ந்த இயக்கமாக செயல்பட்டு வரும் திராவிட முன்னேற்றக்கழகம், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் , பேரறிஞர் அண்ணா, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் கட்டிக் காத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து தமிழ் இனம் தழைக்கவும், தமிழ் நாடு உலக அளவில் உயரவும் தனது ஒவ்வொரு மணித்துளியையும் செலவிட்டு பல்வேறு அறிய திட்டங்களை தந்து தமிழ்நாட்டை உலக அரங்கில் உயர்த்தி , தமிழ்நாட்டை ஆளும் திராவிட நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின் படியும், இளைஞர்களின் எழுச்சி நாயகர் தமிழ் நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சேலத்தில் நடைபெறும் திமுக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் தமிழ்நாட்டில் இருந்து திராவிட இனத்தின் விடியலுக்காகவும் ,மாநில சுயாட்சியை மீட்டெடுக்கவும் லட்சோப லட்ச இளைஞர்கள் சேலத்தில் கூடுகின்றனர்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, திருவாரூர் மாவட்டக்கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் , மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா ஆகியோரின் வழிகாட்டுதல்களின் படி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ். குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் , ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூர் பகுதியில் அந்தந்த ஒன்றிய, நகர. பேரூர் மற்றும் வார்டு கிளைக்கழகங்களில் இருந்து மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமையில் , மாவட்ட அமைப்பாளர் ஏ. எஸ்.குமார் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளின் முன்னிலையில் வாகனங்களில் இருந்து புறப்பட்டனர்.

### சேலம் இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டிற்கு -

# கிருஷ்ணகிரி மாவட்டக் கழகத்தினர் அலைகடலென திரண்டு வாரீர்!

## மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்.

கிருஷ்ணகிரி, ஜன. 21 -

இது குறித்து மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

கழக மாநில இளைஞரணி செயலாரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான மாண்புமிகு சின்னவர் அவர்கள் தலைமையில் இன்று (21ஆம் தேதி) சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாடு தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினை மிஞ்சும் வகையில் நடைபெற உள்ளது.

இந்த மாநாடு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலின் வெற்றிக்கு அடித்தளமாக அமையும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் வகையில் சிறப்பான முறையில் திருப்புமுனை மாநாடாக இது அமையும். இந்த மாநாடு குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் சின்னவர் அவர்கள் அன்பு அழைப்பு விடுத்த வேண்டுகோளில்

நம் மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிவாரியாக 234 தொகுதிகளிலும் கருப்பு சிவப்பு உடையணிந்த இளைஞரணித் தோழர்களின் இருசக்கர வாகன அணிவகுப்பு நடந்தது.

எனவே கழக இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் சின்னவர் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் வரும் 21 ஆம் தேதி அன்று காலை 0800 மணிக்கு நமது கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கழக முன்னணியினர். அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மாவட்டத்தில் உள்ள கழக இளைஞரணித் தோழர்கள் அனைவரும் வெள்ளை சீருடையில் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த மாநாட்டில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த கழகத்தினர் 10,000 பேர் கலந்து கொள்ள உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# செஞ்சி அனையேரியில் 1000 பேருக்கு நல உதவிகள்

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

செஞ்சி ஜன 21.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் அனையேரி ஊராட்சியில் டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர்உமா மகேஸ்வரி ஆனந்தன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் ரவி அனைவரையும் வரவேற்றார்.நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1000 பேருக்கு ரூபாய் 1 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் செல்வமணி, தாட்சயாணி கார்த்திகேயன், அய்யாதுரை, இக்பால், அலெக்ஸ், தங்கவேல், பாபு தக்ஷிணாமூர்த்தி நடராஜ், ஏழுமலை, பாண்டியன், மணி, பாண்டுரங்கன், சிவா, பிராங்கிளின், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகர திமுக சார்பில் தை திருநாளை முன்னிட்டு சமத்துவ பொங்கல் வைத்து பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு நகர செயலாளர் பாலசுப்ரமணியம் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் நகர அவைத்தலைவர் மாணிக்கம், நகர துணை செயலாளர் புவனேஸ்வரி வேல்முருகன், பொருளாளர் ராமச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி ஸ்டாலின், பாலமுரளி கிருஷ்ணன்,மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் பர்கத் அலி, கவுன்சிலர்கள் குமார், பாஸ்கரன், ராஜமாணிக்கம், ஆடிட்டர் வேல்முருகன், ரூபி நாகராஜன்,கோபி , ஆட்டோ முருகன், மணி, ரவி ,துரை, வெங்கடேஷ் , இளங்கோ, பாண்டியன், ராமச்சந்திரன், இளங்கோ மன்னன், மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.